Judicial Form No.53
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : STC.No.311/2023 | | |
| Witness for Complainant | : PW3– Chief and Cross | | |
| Name | : மோகன் | Taluk | : ஊத்தங்கரை |
| Father's / Husband Name | : | Calling : | |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 25.03.2026.

துவக்க நேரம்– 5.00 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது சாமல்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கூடுதல் பொறுப்பாக ஊத்தங்கரை காவல் நிலைய உதவி ஆய்வாளராகவும் இருந்து வருகிறேன். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.09.2022–ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.ராஜேந்திரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த பழனிச்சாமி என்பவர் வந்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் காவல்நிலையம் வந்து குற்ற எண் 409/2022 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச வழக்கின் பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கின் சம்பவ இடத்திற்கு 9/9/2022 மதியம் 12.00 மணிக்கு சாட்சிகள் கந்தசாமி, அரிபுத்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர்

இவ்வழக்கின் சாட்சிகள் பழனிச்சாமி, சுரேஷ்குமார், கந்தசாமி, அரிபுத்திரின் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனங்களை தணிக்கை செய்து ஆய்வறிக்கை வழங்கிய திரு.ஆனந்தன் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(TN24AP7176 Splendor Plus, TN24AT1393 Bolero Maxi Truck Plus ஆகிய வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 7, 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கில் காயமடைந்த பழனிச்சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரவீனா கோமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றிதழ் ஆகியவை அ.சா.ஆ.9, 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் வழக்கினை விசாரித்து, புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் குட்டியப்பன் எதிரிகள் மீது 279, 337 இதச பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் புகார்தாரரிடம் இருந்து வெற்றுபேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்று புகார்தாரர் சொல்லாத சங்கதிகளை போலிசாரே நிரப்பி கொண்டு எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சம்பவயிடம் செல்லாமல் பார்வை மகஜர், வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம்–5.20 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.